Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# பத்துப்பாட்டில்வளமனைகள்

திருமதி ப.செல்லியம்மாள்
அண்ணா பல்கலைக்கழகம் , எம்.ஐ.டி .குரோம்பேட்டை.,
மின்னஞ்சல்:selvimurugan8136@gmail.com.



**ஆய்வு நோக்கம்**

பண்டைய சமூகத்தில் நாடோடிகளாகத் திரிந்த மக்கள் படிப்படியாகத் தங்கள் அறிவு வளர்ச்சியின் காரணமாக தங்களுக்கு உகந்த வாழ்விடங்களை அமைத்துக் கொண்டனர்.இயற்கையோடு இயைந்து இயற்கையைச் சேதப்படுத்தாமல் இயற்கையில் கிடைத்த பொருட்களைக் கொண்டு தாங்கள் வாழும் நிலத்திற்கு ஏற்ப கட்டுமானங்களை உருவாக்கியதோடு பருவ நிலைக்கு ஏற்பவும் தங்கள் வாழ்விடங்களை அமைத்துக் கொண்டனர். தாங்கள் மகிழ்ச்சியாக வாழ்ந்ததோடு தங்கள் சமூகத்தையும், தங்களுக்குப் பின் வந்த சந்ததிகளையும் மகிழ்ச்சியாக வாழ வைத்த சங்க இலக்கிய மக்களின் கட்டடக்கலைநுட்பத்தையும், வளமனைகளையும் ஆய்வதாக இவ்வாய்வுரை அமைகிறது.

**ஆய்வுச் சுருக்கம்**

மனிதனின் அத்தியாவசிய தேவைகள்உணவு, உடை, உறைவிடம். இவற்றில் உணவு, உடைகளில் தன்னிறைவு அடைந்த மனிதர்கள் மூன்றாவதாக உள்ள தனக்கான வாழ்விடங்களை அமைத்துக் கொள்வதில் பிறந்த குழந்தையைப் போல் படிப்படியாக வளர்ச்சி கண்டனர். குகைகளிலும், மரப்பொந்துகளிலும், பரண்களிலும், குடிசைகளிலும் வாழ்ந்த மனிதர்கள்படிப்படியாக நாகரீக வளர்ச்சி பெற்றுஅழகியல் உணர்வோடும்,கலைநயத்தோடும்தங்கள் குடியிருப்புகளை அமைக்க முற்பட்டு வெற்றி கண்டனர். இவ்வாறாக ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழ்ச் சமூகத்தில் கட்டிடக்கலையில் பொறியியல் அறிவும், திறனும், நுட்பமும் சிறந்திருந்து என்பதை சிந்து சமவெளி நாகரிகமான ஹரப்பா மொகஞ்சதாரோ ஆய்வு மூலம் அறிய முடிகிறது. மேலும் இவ்விடங்களை ஆய்வு செய்த ஜான் மார்ஷலும், ஈராஸ் பாதிரியாரும் அங்குள்ள கட்டிடங்கள், அரண்கள் அகழிகள் ,மாளிகைகள் ,மண்டபங்கள் ,குளங்கள் அனைத்தும் திராவிட கலைப்பாணியைச் சார்ந்தவை என்பதை ஆய்வின் மூலம் வெளியிட்டனர். இக்கருத்துக்களை இன்றும் பல அறிஞர்களும் மீளாய்வு செய்து வருகின்றனர். அந்த அடிப்படையில் சங்க இலக்கிய நூலான பத்துப்பாட்டில்வளமனைகளின் நுட்பத்தை ஆய்வதாக இக்கட்டுரையின் பொருண்மை அமைகிறது.

**நூலறி புலவர்கள்**

இன்றைய பொறியியல் வல்லுநர்களைப் போன்று கட்டிடக்கலையில் நுட்பம் வாய்ந்த நூலறி புலவர்கள் சங்க காலத்தில் இருந்துள்ளனர்.இவர்கள் நூலை நேராக பிடித்து திசைகளையும், திசைக்குரிய தெய்வங்களையும் மறவாமல் ,அளவு மாறாமல் அரசமாளிகைகளையும், கோயில்களையும், குடியிருப்புகளையும், நாடக அரங்குகளையும் அமைத்து நிலையான வெற்றி

கண்டுள்ளனர். இதனைப் பத்துப்பாட்டு நூல்களுள்"கட்டடக்கலை நூல் "என்று சிறப்பிக்கப்படும் நெடுநல்வாடையில்

"நூல் அறி புலவர் நுண்ணிதின் கயிறு இட்டு,
தே எம் கொண்டு, தெய்வம் நோக்கி,
பெரும்பெயர் மன்னர்க்கு ஒப்ப மனைவகுத்து "
நெ. வா (76 – 78)

சான்று பகர்கின்றது. காப்பிய நூல்களில் முதலாவதாக விளங்கக்கூடிய சிலப்பதிகாரத்தில் நாடக அரங்க அமைப்பு அளவு முறையோடு அமைக்கப்பட்டதை இளங்கோவடிகள்

"நூல்நெறி மரபின் அரங்கம் அளக்கும்
கோல் அளவு இருபத்து நால்விரல் ஆக
ஒரு கோல் உயரத்து உறுப்பினது ஆகி" (சிலம்பு)

குறிப்பிடுகிறார்.

**நிலத்திற்கேற்ற கட்டுமானம்**

சங்க இலக்கிய மக்கள் தங்கள் நிலங்களின் திணைகளுக்கு ஏற்ப குடியிருப்புகளை அமைத்துக் கொண்டனர்.இச்செய்தியைப் பத்துப்பாட்டு நூல்களில் ஒன்றான பெருபாணாற்றுப்படையில் கடியலூர் உருத்திரன் கண்ணனார் மிக விரிவாக கூறியுள்ளார். தினைப்புனம் காப்பவர்கள் யானை வந்து மேயாதிருப்பதற்காக பரண்களின் மேலே குடிசை அமைத்து வாழ்வர் என்ற செய்தியை உமணர்களின் உப்பு வண்டியோடு உவமையாக

ஒப்பிடுகிறார்.

"வேழம் காவலர் குரம்பை ஏய்ப்பக்
கோழி சேக்கும் கூடுடைப் புதவின்"பெ.பா(51-52)

இளந்திரையன் ஆட்சி செய்யும் நாட்டில் மக்களின் குடியிருப்புகள் ஊகம் என்று சொல்லக்கூடிய ஒருவகை புல்லினால் வேய்ந்த உயர்ந்த நிலை மாடங்களையும், மலைத்தேன் கூட்டை போன்றுஅம்புகளும், துடிப்பறையும் கட்டி தொங்கவிடப்பட்ட பந்தல்களும், வீட்டைச் சுற்றிலும் காவல் உடைய வேட்டை நாய்களும் ,முள் செடியால் ஆன வேலிகளும் வாயிலின் முன் பகுதியில் கூறிய முனை உடைய கழு மரங்களும் வரிசையாக நட்டு வைக்கப்பட்டிருக்கும் பாலைநில கட்டிட அமைப்பு முறையை(120-129) என்ற அடிகள் சுட்டுகின்றன .மேலும், என்றும் இளமை மாறாமல் ஒரே மாதிரியாக இருக்கின்ற குதிர்களை உடைய வீடுகளும்,தென்னங்கீற்றுக்களைக் கொண்டு கட்டப்பட்ட உழவர்களின் வீடுகளும் அமைக்கப்பட்டன என்பதை

"குமரி மூத்த கூடு ஓங்கு நல் இல்" 247
"வன்தோட்டுத் தெங்கின் வாடு மடல் வேய்ந்த" 353

இவ்வடிகள் மூலம் அறிய காண்கிறோம்.

வாயில் அமைப்பு முறை

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

சங்க கால மக்கள் இரவலர்களையும், பரிசிலர்களையும், புலவர்களையும் மதித்துள்ளனர் எனவே வாயில் அமைப்பதில் தனிக் கவனம் செலுத்தியுள்ளனர் .என்பதை, பொருநாராற்றுப்படையில் முடத்தாமக் கண்ணியார் கரிகால மன்னன் ஆட்சிச் சிறப்பை

நசையுளுர்த் தடையா நன் பெருவாயில்(66)

என்கிறார். நெடுநல்வாடையில் வாயில் மண்டபம், கூடம் என ஒவ்வொரு பகுதிகளையும் ஒழுங்குற அமைத்து சிவந்த சாதி லிங்கம் பூசி, நிலை கதவுகளுக்கு வெண்கடுகு அரைத்து பூசி ,நெய் பூசி, வெற்றி கொடியோடு யானைகள் நுழைய தக்க அளவிலே உயர்ந்த கோவில் போல் அரண்மனைகளும்,அரண்மனைக்கு இணையான இல்லத்தின் வாயில் அமைப்புகளும் விளங்கியதை நெடுநல்வாடையில்(76-100) அடிகள் உணர்த்துகின்றன.

**வளமனை மற்றும் கோட்டை அமைப்பு**

மன்னனின் ஆட்சி சிறப்பிற்காகவும், நாட்டின் பாதுகாப்பிற்காகவும் அமைக்கப்பட்டது கோட்டைகள். காவல் அரண்களையும், ஆழமான அகழிகளையும், உயர்ந்தோங்கிய கோபுர வாயில்களையும், நீண்ட மதில்களையும் கொண்ட கோட்டைகள் மற்றும்வளமனைகளைக் கொண்ட சோழ நாட்டை சிறுபாணாற்றுப்படையில் நல்லூர் நத்தத்தனார் நல்லியக்கோடனின் நல்ல இயல்புகளைக் கூறுகையில் உயர்ந்த கோட்டைகளை உடைய சோழ வளநாட்டு உறையூரும் வறுமை உற்றதாக

"ஓங்கு எயில் கதவும் உருமுச்சுவல் சொறியும்

தூங்கு எயில் எரிந்த தொடி விளங்கு தடக்கை"இவ்வடிகள் மூலம் கூறுகின்றார்.

எதிரிகளும் நெருங்க முடியாத கோட்டை என மதுரைக்காஞ்சி

"நெடுமதில் நிரைஞாயில்"ம.கா66

என்கிறது.

**சுடுமண் அமைப்பு**

கட்டிடக்கலையில் வளர்ச்சி பெற்று நாகரீகத்தின் அடையாமாகச் சுடுமண்ணையும், செங்கற்களையும் கொண்டு கட்டிடங்களை அமைத்துள்ளனர் என்பதையும் ஓங்கிய வளமனைகளின் மாடங்களில் ஓவியங்கள் வரைந்திருந்தனர் என்பதையும் அறிய முடிகிறது.

சுடுமண் ஓங்கிய நெடுநகர் வரைப்பின் ( பெ. பா405) குறிப்பிடுகிறது.

இட்டிகை நெடுஞ்சுவர் அகம்(167:13)

புனையா ஓவியம் கடுப்ப புனைவு இல் நெ.வா147

ஓவத்தன்ன இடனுடை வரைப்பின் அகம்

இவ்வடிகள் சான்று பகர்கின்றன.

**திண்ணை அமைப்பு**

மக்கள் ஓய்வெடுப்பதற்கும், குழந்தைகள் விளையாடுவதற்கும், வழிப்போக்கர்கள் தங்குவதற்கும், விருந்து உபச்சாரத்திற்கும் வீட்டின் முன் திண்ணைகளை அமைத்து வளமான வீடுகளைக் கட்டினர். பட்டினப்பாலையில் கடியலூர் உருத்திரன் கண்ணனார் திண்ணைகளில் அமர்ந்து மக்கள்

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

பேசுவதைப் பால் அருந்திய பசுங்கிளிகள் பாடுவது போல் உள்ளது என்று உவமையாகக் கூறியுள்ளார்.

"ஒண்சுவர் நல்இல் உயர்திணை இருந்து"ப. பா (236)

"தெற்றிப் பாவை திணி மணல் அயரும்"    புறம்(283)

புறநானூற்றிலும்தெற்றி என்ற பெயரில் திண்ணைகள் அமைத்து வீடுகள் கட்டியுள்ளதை அறிய முடிகிறது.

**முற்றம்**

வளமான வீட்டின் முன் அமைப்பில் இருந்த திறந்தவெளி இடம் முற்றம் அல்லது முன்றில் என்றப் பெயரால் அழைக்கப்படுகிறது.பழந்தமிழ் மக்களின் பயன்பாட்டை அறியும் போது முற்றத்தின் பயன்பாடு மிகுதியாக இருந்துள்ளது .வீட்டின் முன் பகுதியில் செடி ,கொடிகளையும்,பலா, வேங்கை, போன்றமர வகைகளையும் நட்டு வைத்து நிழலையும், காற்றையும் பெற்று மகிழ்ச்சி யாக ஓய்வெடுத்துள்ளனர். பத்துப்பாட்டில் முற்றம் குறித்து பெரும்பாணாற்றுப்படை, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, பட்டினப்பாலை போன்ற பல நூல்கள் சான்று பகர்கின்றன.

முற்றம் குறித்து ஒவ்வொரு நூலிலும் ஒவ்வொரு வகையான தகவல்கள் பெறப்படுகின்றன. பெரும்பாணாறு(434-435), மதுரைக்காஞ்சி(406) , நெடுநல்வாடை(95)

"தேம்பிழி நறவின் குறவர் முன்றில்"அகம் (78:1)

பாசறை அமைப்பு

சங்கத் தமிழர்கள் காதலையும், வீரத்தையும் இரு கண்களாகப்போற்றினர். பகைநாட்டோடு போரிட்டு வெற்றி கண்பதைவீரத்தின் அடையாளமாகக் கருதினர். போரின் பொருட்டு அரசர்களும், வீரர்களும் தங்குமிடம்போர் பாசறைகள் எனப்பட்டன. பாசறைகள் கூதிர் பாசறை, வேனிற் பாசறை என இரு வகைப்படும் பாசறை குறித்து நெடுநல்வாடை, முல்லைப்பாட்டு ,மதுரைக்காஞ்சி நூல்களில் குறிப்புகள் காணப்படுகின்றன.

முல்லைப்பாட்டில் வெற்றி தரும் போர் வில்லில் துணிகளைத் தொங்கவிட்டு கோல் நட்டு கூடாரமாக்கி வலிய கயிற்றிலே இழுத்து கட்டி தங்குமிடம் பாசறை

"ஓடா வல்வில் தூணி நாற்றி
கூடம்குத்திக் கயிறு வாங்கு இருக்கை"    மு.பா(39-40)

மதுரை காஞ்சியில் உயரப் பறக்கும் பருந்துகளும் எட்ட முடியாத உச்சிகளை உடைய காவல் அரண்கள் கொண்ட பாசறை

"பருந்து பறக்கல்லாப் பார்வல் பாசறை"ம.கா(321)

புறப்பொருள் வெண்பாமாலை என்ற இலக்கண நூலில் மன்னன் பாசறையில் இருந்த

**நிகழ்வை**

"பதிப்பெயரான் மறவேந்தன் பாசறை இருந்தன்று"5    பு.வெ. மா

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

**எழுநிலை மாடம்**

சங்கத் தமிழர்கள் ஒவ்வொரு பருவ நிலைக்கு ஏற்ப கட்டடங்களைக் கட்டினார் .அவ்வாறு கட்டப்பட்ட மாடங்கள் எழுநிலை மாடங்கள்அல்லது வேயா மாடங்கள் என அழைக்கப்பட்டன. இவை நிலவின் அழகை கண்டு மகிழுமாறு அமைக்கப்பட்டது. இக்கட்டிடங்கள் வானைப் போன்று உயர்ந்ததாகஏழு அடுக்குகளைக் கொண்டு அமைக்கப்பட்டிருக்கும். இதனை முல்லைப்பாட்டும், நெடுநல்வாடையும் குறிப்பிடுகின்றன.

"இடம் சிறந்து உயரியஎழு நிலை மாடத்து"(மு.பா86)

சிலப்பதிகாரம் மனையறம்படுத்த காதையில் கோவலனும் கண்ணகியும் எழுநிலை மாடத்து பள்ளி அறையில் தங்கியிருந்தனர் என்ற செய்தி குறிப்பிடப்படுகிறது.

**நிறைவுரை**

பொதுவாக கட்டிடங்களை இரண்டு நிலைகளில் அமைப்பர் நுண்கட்டடங்கள் பொதுக்கட்டடங்கள். பண்டைய மக்கள் கட்டுமான பொருட்களுக்கும், அழகியல் கூறுகளுக்கும் முக்கியத்துவம் அளித்தனர். தற்கால கட்டடக் கலைகள் பெரும்பான்மையும் போர்த்துக்கீசிய மற்றும் ஆங்கிலேய கட்டடக்கலைப்பாணியைச் சார்ந்தவையாக உள்ளன. தற்போதைய இருபதாம் நூற்றாண்டில் அழகூட்டல் என்ற நிலை மாறி பயன்பாடு என்ற அடிப்படையில் கட்டுமானங்களின் தன்மை மாறி அதிநவீன தொழில்நுட்பத்தால் சில மாதங்களிலும் சில வாரங்களிலும் கட்டடங்கள் அமைக்கப்படுகின்றன.

**பார்வை நூல்கள்**

**முதன்மை ஆதாரம்**

1.பத்துப்பாட்டு மூலமும் உரையும்ஞா.மாணிக்கவாசகன்.

2. பத்துப்பாட்டு ஆராய்ச்சி ம. இராசமாணிக்கனார்.

**துணைமை ஆதாரம்**

1. பொருநாராற்றுப்படை கமலா முருகன் உரை
2. பட்டினப்பாலை ஆராய்ச்சி
3 . சிலப்பதிகாரம் மனையறம் படுத்த காதை
4. பொருநைகீழடி அகழாய்வு நூல்
5. பண்டைய கால தொழில்கள் விசி .சசிவல்லி